முக்கிய வார்த்தைகள்:
*பக்தியுள்ள / நேர்மையான*
*செல்வாக்கு / ஆதிக்கம்*
*நட்பு / தோழமை*

**இஸ்லாமிய சமய மன்றம் (சிங்கப்பூர்)**
**வெள்ளிக்கிழமைப் பிரசங்கம்**
**17 அக்டோபர் 2025 / 25 ரபீவுல் ஆகிர் ஹிஜிரி 1447**

**நேர்மையான தோழமையின் மதிப்பு**

ٱلْحَمْدُ لِلَّهِ ٱلَّذِي هَدَانَا لِهَٰذَا وَمَا كُنَّا لِنَهْتَدِيَ لَوْلَا أَنْ هَدَانَا ٱللَّهُ، وَأَشْهَدُ أَنْ لَا إِلَٰهَ إِلَّا ٱللَّهُ وَحْدَهُ لَا شَرِيكَ لَهُ، وَأَشْهَدُ أَنَّ سَيِّدَنَا مُحَمَّدًا عَبْدُهُ وَرَسُولُهُ. ٱللَّهُمَّ صَلِّ عَلَىٰ سَيِّدِنَا مُحَمَّدٍ وَعَلَىٰ آلِهِ وَأَصْحَابِهِ أَجْمَعِينَ. أَمَّا بَعْدُ، فَيَا عِبَادَ ٱللَّهِ، أُوصِي نَفْسِي وَإِيَّاكُمْ بِتَقْوَى ٱللَّهِ عَزَّ وَجَلَّ، فَقَدْ فَازَ ٱلْمُتَّقُونَ.

**ஜும்ரதல் முஃமினீன் ரஹிமகுமுல்லாஹ் [ஓரிறை நம்பிக்கையாளர்களின் சமுதாயமே அல்லாஹ் உங்களுக்கு அருள் புரிவானாக!]**

அல்லாஹ் சுப்ஹானஹு வதஆலாவின் அனைத்து கட்டளைகளை நிறைவேற்றுவதன் மூலமாகவும், அல்லாஹ் தடை செய்துள்ள அனைத்து விஷயங்களிலிருந்து தவிர்ந்து கொள்வதன் மூலமாகவும் அல்லாஹ்வின் மீதான நமது ”தக்வா” [பக்தியை] அதிகரித்துக் கொள்வோமாக! ”தக்வா” வை அதிகரித்துக் கொள்வதற்காக, அல்லாஹ்வின் மீது **பக்தியுள்ள** அடியார்களுடன் சேர்ந்து வாழ்வோமாக! அல்லாஹ் சுப்ஹானஹு வதஆலா, **நேர்மையும் பக்தியுமுள்ள ஒவ்வொரு தோழமையையும்** நமக்கு வழங்கி, அருள் புரிவானாக! நம்மனைவரையும் தனது சொர்க்கத்தில் ஒன்று சேர்ப்பானாக! ஆமீன். யாரப்பல் ஆலமீன்.

**அன்பும் அருளுமிக்க ஜமாஅத்தார்களே!**

நமக்கு நெருக்கமான **நண்பர்கள்** யார்? நமக்கு நெருக்கமான **நண்பர்களாக** இருப்பதற்குத் தகுதியானவர்கள் யார்? என நம்மை நாம் கேட்டுக் கொள்ளும் போது, நமது சக ஊழியர்கள், வகுப்புத் தோழர்கள், பள்ளித் தோழர்கள் அல்லது இவர்களிடம் காணப்படும் அதே ஆர்வத்தை நம்மிடம் பகிர்ந்து கொள்பவர்கள் ஆகியோர் நமக்கு நினைவுக்கு வரலாம்.

மக்களில் சிலர், இவ்வுலகில் நமக்கு **நண்பர்களாக** இருப்பார்கள்: ஆனால், மறுமைத் தீர்ப்பு நாளின் போது அவர்கள் நமக்கு எதிரிகளாக மாறி விடுவார்கள் என நான் கூறினால், நீங்கள் நம்புவீர்களா? இவ்வுலகில் அவர்களை நாம் **நண்பர்களாக** ஆக்கிக் கொண்டதன் காரணமாக மறுமையில் நாம் வருத்தப்பட வேண்டியது வரும்.

சகோதரர்களே! அல்லாஹ் சுப்ஹானஹு வதஆலா, திருக்குர்ஆனின் "அஜ்ஜுக்ருஃப்" எனும் அத்தியாயத்தின் 67-வது வசனத்தில் கூறும் பின்வரும் கருத்துக்களில் கவனம் செலுத்துவோமாக!:

ٱلْأَخِلَّآءُ يَوْمَئِذٍۭ بَعْضُهُمْ لِبَعْضٍ عَدُوٌّ إِلَّا ٱلْمُتَّقِينَ ٦٧

பொருள்: "அந்நாளில், நெருக்கமான **நண்பர்கள்** சிலருக்குச் சிலர் பகைவர்களாக ஆகி விடுவார்கள்; எவர்களின் **தோழமை**, தக்வா [இறை பக்தியை] அடிப்படையாகக் கொண்டிருந்ததோ அவர்களைத் தவிர" [அதாவது, ஓரிறை நம்பிக்கை மற்றும் **நற்காரியங்களை** அடிப்படையாகக் கொண்டிருந்ததோ அவர்களைத் தவிர]

**தோழமையை**, சில வேளைகளில் நாம் சாதாரணமான விஷயமாக எடுத்துக் கொள்கிறோம்; ஆனால் முஸ்லிமுடைய வாழ்க்கையில் அது ஆழமான தாக்கத்தை ஏற்படுத்துவதாகும். இதனை மறு வார்த்தைகளில் சொல்வதாக இருந்தால், "நல்ல **நண்பர்கள்** நமக்கு "தக்வா" வையும் நேர்மையையும் வலியுறுத்துபவர்களாக இருப்பார்கள்; அவர்கள்

நற்காரியங்களைச் செய்யுமாறு ஏவுவார்கள்; அதே வழியில் செல்லுமாறு தொடர்ந்து நம்மை ஆர்வமூட்டிக் கொண்டிருப்பார்கள்" எனக் கூறலாம்.

**வெள்ளிக்கிழமையில் ஒன்று கூடியுள்ள, அன்பும் அருளுமிக்க ஜமாஅத்தார்களே!**

நமது பாசத்திற்குரிய இறைத்தூதர்[ஸல்] அவர்கள் நவின்றார்கள்:

*"ஒருவர், தனக்கு நெருக்கமான **நண்பருடைய** மார்க்கத்தை, [அதாவது வாழ்க்கை முறையைப்] பின்பற்றுபவராக இருப்பார்; எனவே, உங்களில் ஒவ்வொருவரும் யாரை **நண்பர்களாக** ஆக்கிக் கொண்டுள்ளீர்கள் எனச் சிந்தித்துக் கொள்ளட்டும்" [ஹதீதைப் பதிவு செய்து அறிவிப்பவர்: இமாம் அபூதாவுத் ரஹ்]*

மேற்கண்ட ஹதீதில், அல்லாஹ்வின் தூதர்[ஸல்] அவர்கள், தோழமைக்கும் ஒருவரது சன்மார்க்க வாழ்க்கைக்கும் மத்தியில் காணப்படும் தொடர்பை மிகத் தெளிவாக விளக்கியுள்ளார்கள். நமது தோழமையும், சமூக வட்டமும் நாம் மார்க்கத்தைச் செயல்படுத்துவதிலும் நாம் வாழ்கின்ற வாழ்க்கை முறையிலும் ஆதிக்கம் செலுத்துபவையாக உள்ளன; நம்மில் பலர், இந்த உண்மையை அறிந்திருப்பார்கள் என நம்புகிறேன். எனவே, இன்றைய "குத்பா" பிரசங்கத்தின் நினைவூட்டுதலை திறந்த உள்ளங்களுடன் கவனத்தில் கொள்வோமாக! தற்போது ஓதப்பட்ட திருக்குர்ஆன் வசனம் மற்றும் ஹதீதின் கருத்துக்களிலிருந்து பாடங்களைப் பெறுவோமாக! இங்கு, தோழமை சம்பந்தமாக, இஸ்லாமியக் கண்ணோட்டத்தில், மூன்று குறிப்புகளை உங்களுடன் பகிர்ந்து கொள்ள விரும்புகிறேன்:

**முதலாவதாக: நல்ல ஆதிக்கம், கெட்ட ஆதிக்கம், தாக்கம் ஆகியவற்றை அறிதல்**

ஒரு நண்பருடன் பழகும் போது இந்த **நண்பர்**, நம்மை அல்லாஹ்வின் பக்கம் நெருக்கமாக ஆக்குவாரா, அல்லது அல்லாஹ்வை விட்டும் நம்மைத் தூரமாக்குவாரா? என நம்மை நாம் கேட்டுக் கொள்ள வேண்டும்; எனது சகோதரர்களே! இக்கேள்வியானது, நம்மில் இளைஞர், முதியவர் ஆகிய அனைத்து வயதினருடன் சம்பந்தப்பட்டதாகும்.

டிஜிட்டல் மயமான இக்காலத்தில், சமூக ஊடகங்கள், ஆன்-லைன் தகவல் தொடர்புகள், குரூப் சாட் ஆகியவற்றின் மூலமாகவும் **தோழமைகள்** ஏற்படுத்தப்படுகின்றன; இவற்றில் ஒவ்வொன்றுக்கும் தனிப்பட்ட **ஆதிக்கம்** செலுத்தும் தன்மைகள், தாக்கங்கள் உள்ளன. நாம் பாவமான **ஆதிக்கங்களிலிருந்து** விலகி இருப்பது அவசியமாகும். உதாரணமாக, வதந்திகள், தவறான செய்திகளைப் பரப்புதல், பாவமான செயல்களை சாதாரணமானவையாகக் கருதுதல் ஆகியவற்றிலிருந்து தவிர்ந்து கொள்வது அவசியமாகும். மறுபுறம், உடன்பாடான **ஆதிக்கங்களைக்** காணும் போது அவற்றைத் தழுவிக் கொள்வது அவசியமாகும். இறைத்தூதர்[ஸல்] அவர்கள், ஒரு நல்ல **நண்பரை**, நறுமணத்தை விற்கும் நபரோடு ஒப்பிட்டுக் கூறியுள்ளார்கள். நல்ல நண்பர்களிடம் காணப்படும் நற்காரியங்களின் நறுமணத்தைப் பற்றிப் பிடித்துக் கொள்ள வேண்டும்.

## இரண்டாவதாக: நமது வாழ்க்கையில் நேர்மையானத் தோழமைக்கு உதாரணமாக நாம் ஆகுவது

இது சம்பந்தமாக, நம்மை நாம் பின்வருமாறு மனப்பூர்வமாகக் கேட்டுக் கொள்ள வேண்டும். நாம் நமது **நண்பர்களை,** நேர்மையானத் தனிநபர்களாக ஆகுவதற்கு, அவர்களை ஆர்வப்படுத்தும் உடன்பாடான ஆதிக்கமாக, தாக்கமாக இருக்கின்றோமா? அல்லது பாவச் செயல்களில் அவர்கள் விழுந்து விடுவதற்கு நாம் காரணமாக இருக்கின்றோமா? எனக் கேட்டுக் கொள்ள வேண்டும்.

அன்பிற்குரிய சகோதரர்களே! எவ்வாறு நல்ல சக்திகளும் **ஆதிக்கங்களும்** நமக்குக் கிடைக்க வேண்டுமென நாம் விரும்புகிறோமோ அவ்வாறே, நமது **தோழமையிலும்** நேர்மறையான மூலங்களாக நாம் அமைவதற்கு முயற்சிக்க வேண்டும். எனவே,, நமது **நண்பர்களின்** ஓரிறை நம்பிக்கையைப் பலப்படுத்துகின்ற, திறந்த உள்ளங்களையும் கருணைச் சிந்தனையையும் கொண்ட, நமது **நண்பர்கள்** சோதனைகளுக்குள்ளாகும் போது அவர்களுக்கு உதவுகின்ற தனிநபர்களாக ஆகுவதற்கு நாம் முயற்சிப்போமாக.

நாம் நமது **நண்பர்களுக்கு** அறிவுப்பூர்வமாகவும் கிருபையுடனும் உபதேசம் செய்ய வேண்டும்; சாதாரணமாகப் பேசி, சிரித்து மகிழ்வதற்கான **நண்பர்களாக** மட்டும் இருப்பது கூடாது; மாறாக, அத்துடன், சொர்க்கத்தின் பால் ஒருவர் மற்றவரை ஆர்வமூட்டி, அழைப்பு விடுக்கும் **நண்பர்களாகவும்** இருக்க வேண்டும்.

**மூன்றாவதாக: நேர்மையான தோழமையை வளர்க்கும் சூழல்களில் நம்மை நாம் இணைத்துக் கொள்ள வேண்டும்.**

நமக்கு நேர்மையான **தோழமைகளையும்** தொடர்புகளையும் உருவாக்குகின்ற வாய்ப்புகளை நாம் தேடிக் கொண்டிருக்க வேண்டும்; ஓரிறை நம்பிக்கையாளர், வணக்க வழிபாட்டுச் செயல்கள், மார்க்க சம்பந்தமான போதனைகள் நடை பெறும் போது அவற்றில் கலந்து கொள்வது ஆகியவற்றின் மூலம் தனது ஆன்மீக ஆற்றலைப் பலப்படுத்த முயற்சிக்க வேண்டும். அதற்கான சந்தர்ப்பங்களும் **தோழமைகளும்** கிடைக்கும் போது அதில் கலந்து கொள்ள வேண்டும். இவ்விதமானத் தோழமைகள், தொண்டு சார்ந்த, சமுதாய நலம் சார்ந்த பொதுச் சேவைகளை நமக்கு நினைவூட்டுபவையாக இருக்கும்.

**எனது அன்பிற்குரிய சகோதரர்களே!**

நன்மைகளைச் செய்ய முயற்சிக்கின்ற நேர்மையானத் தோழர்களால் நாம் சூழப்படும் போது, நற்காரியங்களைச் செய்வதில் நிலைத்து நிற்பது நமக்கு நிச்சயம் எளிதாகி விடும்.

அதே சமயம், நமது **நண்பர்களில்** எவராவதொருவர் கடந்த காலத்தில் தவறுகளைச் செய்திருந்தார்; அவர் தனது தவறுகளிலிருந்து திருந்தி, மாற்றத்தை ஏற்படுத்திக் கொள்ள விரும்புகிறார் என்றால், அவருக்கு நாம் உதவ வேண்டும். உபகாரச் சிந்தனையுடன், அல்லாஹ்வின் கிருபையின் பால் அவருக்கு வழிகாட்டுங்கள். இறைத்தூதர்[ஸல்] அவர்கள் நவின்றுள்ளார்கள்:

*"எவரொருவர், மற்ற ஒருவருக்கு நன்மையின் பால் அறிவித்துக் கொடுக்கின்றாரோ, அவ்வாறு அறிவித்துக் கொடுக்கப்பட்டவர் அந்த நன்மையைச் செய்யும் போது அவருக்கு என்ன நன்மை கிடைக்குமோ அதே அளவு நன்மை அறிவித்துக் கொடுத்த இவருக்கும் கிடைக்கும்"* [ஹதீதைப் பதிவு செய்து அறிவிப்பவர்: இமாம் முஸ்லிம் ரஹ்]

நல்ல **தோழமை** என்பது நாம் விரும்பும் நபருடன் தொடர்பை ஏற்படுத்திக் கொள்வது என்பது மட்டுமல்ல, மாறாக, அத்துடன், நாம் விரும்பும் அந்த நபர், அல்லாஹ்வின் பிரியத்துக்குரியவர்களாகவும் அவனது திருப்தியைப் பெற்ற நல்லடியார்களாகவும் நாம் ஆகுவதற்கு உதவுபவராக இருக்க வேண்டும். நாம் மற்றவர்களுக்கு நன்மையை நினைவூட்டும் **நண்பர்களாக** இருக்க வேண்டும்; பொழுதுபோக்கு **நண்பர்களாக** மட்டும் இருப்பது கூடாது; ஒருவர் மற்றவருக்கு உபதேசம் செய்யும் **நண்பர்களாக** இருக்க வேண்டும்; மற்றவர்களைச் சிறுமைப்படுத்துகின்ற, தவறான தீர்ப்புகளை வழங்குகின்ற நபர்களாக இருப்பது கூடாது.

நாம் இவ்வுலகில் ஏற்படுத்திக் கொள்ளும் ஒவ்வொரு தோழமையும் நிரந்தரமானவையாக அமையட்டுமாக! அல்லாஹ் சுப்ஹானஹு வதஆலா,

"தக்வா" வை அடிப்படையாகக் கொண்டு நண்பர்களாக உள்ளவர்கள், நன்மை செய்வதில் ஒருவருக்கொருவர் பலப்படுத்திக் கொள்பவர்கள், அல்லாஹ்வின் திருப்தியைப் பெற்றவர்கள் ஆகியோரில் ஒருவராக நம்மை ஆக்குவானாக! ஆமீன். யாரப்பல் ஆலமீன்,

أَقُوْلُ قَوْلِي هَذَا وَأَسْتَغْفِرُ اللهَ العَظِيْمَ لِي وَلَكُمْ، فَاسْتَغْفِرُوهُ إِنَّهُ هُوَ الغَفُوْرُ الرَّحِيْم.

**இரண்டாவது பிரசங்கம்**

**الحَمْدُ للهِ حَمْدًا كَثِيرًا كَمَا أَمَرَ، وَأَشْهَدُ أَن لَا إِلَهَ إِلَّا اللهُ وَحْدَهُ لَا شَرِيكَ لَهُ، وَأَشْهَدُ أَنَّ سَيِّدَنَا مُحَمَّدًا عَبْدُهُ وَرَسُولُهُ. اللَّهُمَّ صَلِّ وَسَلِّمْ عَلَى سَيِّدِنَا مُحَمَّدٍ وَعَلَى آلِهِ وَأَصْحَابِهِ أَجْمَعِينَ. أَمَّا بَعْدُ، فَيَا عِبَادَ الله، اِتَّقُوا اللهَ تَعَالَى فِيمَا أَمَرَ، وَانتَهُوا عَمَّا نَهَاكُم عَنْهُ وَزَجَرَ.**

**أَلَا صَلُّوا وَسَلِّمُوا عَلَى النَّبِيِّ الْمُصْطَفَى، فَقَدْ أَمَرَنَا اللهُ بِذَلِكَ حَيْثُ قَالَ فِي كِتَابِهِ العَزِيزِ: إِنَّ اللهَ وَمَلَائِكَتَهُ يُصَلُّونَ عَلَى النَّبِيِّ يَا أَيُّهَا الَّذِينَ ءَامَنُوا صَلُّوا عَلَيهِ وَسَلِّمُوا تَسْلِيمًا. اللَّهُمَّ صَلِّ وَسَلِّمْ وَبَارِكْ عَلَى سَيِّدِنَا مُحَمَّدٍ وَعَلَى آلِ سَيِّدِنَا مُحَمَّدٍ.**

**وَارْضَ اللَّهُمَّ عَنِ الخُلَفَاءِ الرَّاشِدِينَ المَهْدِيِّينَ سَادَاتِنَا أَبِي بَكْرٍ وَعُمَرَ وَعُثْمَانَ وَعَلِيٍّ، وَعَن بَقِيَّةِ الصَّحَابَةِ وَالقَرَابَةِ وَالتَّابِعِينَ، وَتَابِعِي التَّابِعِينَ، وَعَنَّا مَعَهُم وَفِيهِم بِرَحْمَتِكَ يَا أَرْحَمَ الرَّاحِمِينَ.**

**اَللَّهُمَّ اغْفِرْ لِلْمُؤْمِنِينَ وَالْمُؤْمِنَاتِ، وَالْمُسْلِمِينَ وَالْمُسْلِمَاتِ، الْأَحْيَاءِ مِنْهُم وَالْأَمْوَاتِ. اَللَّهُمَّ ادْفَعْ عَنَّا الْبَلَاءَ وَالْوَبَاءَ وَالزَّلَازِلَ وَالْمِحَنَ، مَا ظَهَرَ مِنْهَا وَمَا بَطَنَ، عَنْ بَلَدِنَا خَاصَّةً، وَسَائِرِ الْبُلْدَانِ عَامَّةً، يَا رَبَّ الْعَالَمِينَ. اَللَّهُمَّ انْصُرْ إِخْوَانَنَا الْمُسْتَضْعَفِيْنَ فِي غَزَّة وَفِي فِلَسْطِيْنَ وَفِيْ كُلِّ مَكَانٍ عَامَّةً، يَا أَرْحَمَ الرَّاحِمِينَ. اَللَّهُمَّ بَدِّلْ خَوْفَهُمْ أَمْنًا، وَحُزْنَهُمْ فَرَحًا، وَهَمَّهُمْ**

فَرَجًا، يَا رَبَّ العَالَمِينَ. اَللّٰهُمَّ اكْتُبِ السِّلْمَ وَالسَّلَامَ وَالأَمْنَ وَالأَمَانَ لِلْعَالَمِ كُلِّهِ وَلِلنَّاسِ أَجْمَعِينَ. رَبَّنَا آتِنَا فِي الدُّنْيَا حَسَنَةً، وَفِي الآخِرَةِ حَسَنَةً، وَقِنَا عَذَابَ النَّارِ.

عِبَادَ اللهِ، إِنَّ اللهَ يَأْمُرُ بِالعَدْلِ وَالإِحْسَانِ وَإِيتَاءِ ذِي القُرْبَى، وَيَنْهَى عَنِ الفَحْشَاءِ وَالمُنكَرِ وَالبَغْيِ، يَعِظُكُمْ لَعَلَّكُمْ تَذَكَّرُونَ، فَاذْكُرُوا اللهَ العَظِيمَ يَذْكُرْكُمْ، وَاشْكُرُوهُ عَلَى نِعَمِهِ يَزِدْكُمْ، وَاسْأَلُوهُ مِن فَضْلِهِ يُعْطِكُم، وَلَذِكْرُ اللهِ أَكْبَرُ، وَاللهُ يَعْلَمُ مَا تَصْنَعُونَ.